## திருத்தம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026

2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிய 2,500 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 'இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" தொடர்பான அறிவித்தல் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகிறது.

I. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 7 (இ) வயது தொடர்பான பந்தி பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது.

2026.08.31 ஆம் திகதியன்று இருபத்திரண்டு (22) வயதுக்குக் குறையாதவராகவும் முப்பத்தைந்து (35) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய வயது தொடர்பான தகைமையானது விண்ணப்பதாரியின் பிறந்த தினமானது 2004.08.31 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னதாகவும், 1991.08.31 ஆம் திகதியோ அல்லது அதற்குப் பின்னதாகவும் அமைந்திருப்பின் மாத்திரமே பூர்த்தி செய்யப்படுவதாக அமையும்)

அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிபவர்களுக்கான உயர்ந்தபட்ச வயது எல்லை 35 வயதாகும். (அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டு தண்டனை பெற்றிருக்கக் கூடாது.)

II. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.09.11 வரை நீடிக்கப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களும் அவ்வாறே நடைமுறையில் இருக்கும் என்பதுடன், தகைமைகள் பரிசீலிக்கப்படும் திகதியும் 2026.08.31 ஆம் திகதியாகவே மாற்றமின்றித் தொடரும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

செயலாளர்,
நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சு.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2026, ஓகத்து மாதம் 25.

08-386

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.